**<u>பொது மக்களுக்கான அறிவித்தல்</u>**

**1972 இன் 7 ஆம் இலக்க வீட்டு வாடகை சட்டத்தை நீக்கம் செய்வதற்கான சட்டம் மற்றும் வசிப்பாளர்களை பாதுகாப்பதற்கான சட்ட வரைவு**

தற்போது இலங்கையில் அமுலில் உள்ள 1972 இன் 7 ஆம் இலக்க வீட்டு வாடகை சட்டத்தை நீக்கம் செய்வதற்கான சட்டம் மற்றும் வசிப்பாளர்களை பாதுகாப்பதற்கான சட்டவரைவு மும்மொழிகளிலும் 2025.09.18 ஆம் திகதி அரசாங்க அச்சகத்தினால் அவர்களின் இணையத்தளத்தில் Bills (வரைவு) – Rent Repeals and Protection of Occupants என வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த சட்டவரைவு தொடர்பிலான உங்களின் கருத்துக்கள், சிபாரிசுகள் அல்லது பிரேரணைகள் இருப்பின் 2026.03.04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

மேற்படி தகவல்களை சமர்ப்பிக்கும் போது அதனை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "1972 இன் 7 ஆம் இலக்க வீட்டு வாடகை சட்டத்தை நீக்கம் செய்வதற்கான சட்டம் மற்றும் வசிப்பாளர்களை பாதுகாப்பதற்கான சட்டவரைவுக்கான பிரேரணைகள்" எனக் குறிப்பிட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவைக்குமாறு அல்லது legal@moj.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோருகின்றேன்.

**செயலாளர்,**
**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு,**
**இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு 10.**

வசிப்பாளர்களை பாதுகாப்பதற்கான சட்டவரைவு மற்றும் வீட்டு வாடகைச் சட்டத்தைக நீக்கம் செய்வதற்கான சட்டவரைவுக்கு இதன் மூலம் வாசகர்கள் பிரவேசிக்க முடியும் -

வசிப்பவர்களை பாதுகாப்பதற்கான சட்டவரைவு

https://documents.gov.lk/view/bills/2025/9/634-2025_T.pdf

வீட்டு வாடகைச் சட்டத்தைக நீக்கம் செய்வதற்கான சட்டவரைவு

https://documents.gov.lk/view/bills/2025/9/633-2025_T.pdf

செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு